DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 5/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : திருமலை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 22.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 22nd January 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது ராமசாமியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊரைச் சேர்ந்தவர். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நான் ஊர் நாட்டாமையாக இருந்ததால் என்னை இவ்வழக்கில் சாட்சியாக போலீசார் சேர்த்தனர். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>நீதிமன்ற விசாரணை</u>**

15.10.2012 ம் தேதி எங்கள் ஊர் மாரியப்பன் அம்மா இறந்த அடக்கத்திற்கு மயானக்கரைக்கு சென்றிருந்தோம் என்றும், அங்கு வைத்து எங்க ஊர் பிச்சமுத்துவை எதிரி துரைப்பாண்டி கிண்டல் செய்து அசிங்கமாக பேசினார்

என்றும், அதை நானும், அங்கு நின்ற சிலரும் கேட்டு சத்தம் போட்டு எதிரியை போகச்சொன்னோம் என்றும், பின்னர் அன்றைய நாள் மாலை 6 மணியளவில் எதிரி பிச்சமுத்துவை பார்த்து மீண்டும் அசிங்கமாக பேசினார் என்றும், கம்பால் அடித்து நாடியில் காயம் ஏற்படுத்தினார் என்றும், கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், மேற்படி சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII Code of Criminal Procedure)<br>(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 5/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : மிக்கேல்ராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 22.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 22nd January 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது ராமசாமியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊருக்கு போலீசார் வந்து துரைப்பாண்டிவீட்டிற்கு முன்பு பிரச்சனை நடந்ததாக சொல்லி ஆய்வு செய்தனர். அவர்கள் தயாரித்த பார்வை மகஜரில் நான் கையொப்பம் போட்டேன். பார்வை மகஜரில் உள்ளவிபரம் எனக்கு தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற விசாரணை**

15.10.2012 ம் தேதி இரவு 11.30 மணியளவில் சின்னகோவிலான்குளம் காவல் உதவி ஆய்வாளர் அந்த காவல்நிலையக்குற்ற எண்.233/2012 வழக்கில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் என் முன்புக்கும், கருப்பசாமி என்பவர் முன்புக்கும் டார்ச் லைட் மற்றும் தெருவிளக்கு வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் கருப்பசாமியும் கையெழுத்து போட்டோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**